**<u>O.S.No.18/2017</u>**

<u>பி.வா.சா.1, திரு.ஜவரூல்லாகான்</u>

நாள் : 07.11.2024 நேரம் : 12.00 P.M.

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>**

1) நான் முதுகுளத்தூரை சேர்ந்த திடல் பள்ளிவாசலின் ஜமாத் தலைவராக இருந்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்கின் 1ம் பிரதிவாதி அப்துல் அசன்ஷேட் தற்சமயம் ஒரு வருட காலமாக முதுகுளத்தூரில்தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வழக்கை தொடர்ந்து நடத்த வேண்டுமா அல்லது கைவிடவேண்டுமா என்ற விவரம் 1ம் பிரதிவாதியை விசாரித்தால்தான் தெரியும் என்றால் சரிதான். நான்தான் தற்போது அவரிடம் இருந்து பொது அதிகாரம் பெற்றுள்ளேன். எனக்கு தமிழ், ஆங்கிலத்தில் உள்ள பெயர்களை வாசிக்க தெரியும் என்றால் தெரியும். 1ம் பிரதிவாதியின் தந்தை பெயர் காதர் சுல்தான். காதர் சுல்தான் அப்பா பெயர் முகமது அப்துல்லா. காதர் சுல்தான் உடன் பிறந்தவர்கள் சாகுல் ஹமீது ஹமினா. 1ம் பிரதிவாதியின் தகப்பனாரின் தகப்பனார் முகமது அப்துல்லாவின் மனைவி பெயர் அஸ்மாபீவி.

2) என்னிடம் காட்டப்படும் பரமக்குடி உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண் 193/1965 ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையின் மேற்படி நபர்கள் பிரதிவாதிகளாக உள்ளார்கள் என்றால் நான் படித்துபார்த்ததில் அவர்களது பெயர் உள்ளது. வழக்கு நடந்தது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக 1ம் பிரதிவாதியிடம் விவரத்தை கேட்டு சாட்சியம் அளிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.15 P.M

சாட்சியின் கையொப்பம்